
டக்கு வா
தெற்கு தேய்கிறது!
தை மாற்றியமைக்கப் போரிடுவதுதான்
தி. மு. க. வின் தேர்தல் திட்டம்!
Che

# காமராசரே!
# கொலைபாதகம் வேண்டாம்!

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்னும் கோரிக்கைக்கு முதன்மை தந்து உண்ணாநோன்பு இருக்கும் சங்கு கணேசன காமராசருக்கு எழுதியிருக்கும் கடிதம் இது!

பாவம்; அந்தப் பழம் பெரும் தேச பக்தர் தனது கோரிக்கைகள் நிறைவேற ஆண்டவனை வேண்டியபடி அணு அணுவாக தினந்தினமும் செத்துக் கொண்டிருக்கிறார்!

அவரது வடிவத்திலே காந்தியம் கண்ணீர் வடிக்கிறது; உண்மைத் தியாகம் அழுது புலம்புகிறது. இருந்தும் காமராசருக்குக் கண் திறக்கவில்லை; காது கேட்கவில்லை!

ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளை ஒக்கும்—என்னும் வாசகத்தை நிறைவேற்ற வந்த சங்கு கணேசனின் கடிதம் இதோ; படியுங்கள்!

அன்புடையீர்!

சென்ற 35 வருட காலமாக தேச சேவையில் ஈடுபட்ட சக ஊழியன் என்ற முறையில் நான் தங்களுக்குச் செய்து கொள்ளும் கடைசி விண்ணப்பம் இது. என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். காந்திஜியுடன் எனக்கிருந்த தொடர்பும், காங்கிரசுடன் நான் கொண்டிருந்த தொடர்பும் உங்களுக்குத் தெரியும். கிராமசேவைக்கே நான் எனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். இன்றைய தினம் கிராம வாழ்க்கை நரக வேதனையாயிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று முயன்றேன்; கிராமங்களிலே உள்ள மக்கள் மக்களாக வாழ்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன்; துடிதுடித்தேன்; பொது ஜன சேவைக்கான சூழ்நிலை எல்லோருக்கும் ஏற்பட வேண்டுமென்றும் விரும்பினேன். சர்க்காரிடமிருந்து கிராம மக்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்க நான் பல வருஷங்களாக முயன்றேன். எனது முயற்சிகள் வீணாயின; வெற்றி பெறவில்லை.

இந்தக் கண்ணோட்டத்திலே பின்வரும் கோரிக்கைகளை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

## தமிழ்நாடு

1. சென்னை ராஜ்யத்துக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும். காலத்தின் போக்கு இது. சங்கரலிங்க நாடாரின் ஆத்மா கேட்பது இது. எனவே இது எனது முதல் கோரிக்கை. தமிழ்நாடு என்ற வார்த்தை ஒரு மந்திரம் போலாகிவிட்டது. ஒற்றுமை உண்டு பண்ணக் கூடிய சொல். சகல கட்சிகளையும் ஒன்றாகப் பிணைக்கும் சொல் தமிழ்நாடு.

## பஞ்சாயத்து ராஜ்யம்

2. 'பாழடைந்த கிராமங்கள்' என்ற புத்தகம் ஸ்ரீ ஸி. அனந்தாச்சாரியார் எழுதியது. அதிலே குறிப்பிட்டிருக்கிறபடி கிராம பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். "இந்தியா கிராமத்தில்தான் வாழ்கிறது. இந்தியாவின் விமோசனம் குடிசையில்தான் இருக்கிறது" என்றார் காந்தி. இதை நாம் ஒப்புக் கொள்ளுவது உண்மையானால் கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தை உடனடியாகத் திருத்த வேண்டியது அவசியம்.

நெற்பயிர், மடயம்பாக்கம் என்ற கிராமங்களில் வாழும் விவசாயத் தொழிலாளருக்கு விமோசனம் தேவை; உடனடியாகத் தேவை. பஞ்சாயத்து ராஜ்யம் ஒன்றே வழி. மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ள உதவ வேண்டும். விவரங்களுக்கு இணைப்பில் காண்க. செங்கல்பட்டு ஜில்லாவில் உள்ள ஆண்டார்குப்பம், புரிசை, பிச்சிவாக்கம் முதலிய கிராமங்களுக்கும் விமோசனம் அவசியம்.

நமது அரசியல் சட்டம் சர்க்காரின் அடிப்படை கிராமம் தான் என்று சொல்கிறது. கிராமப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி சுயராஜ்பக் கருக்களாக இயங்குவதற்கு வேண்டிய அதிகாரங்களை எல்லாம் அளிக்க வேண்டும். இந்த விஷயத்தில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமாக. (ஷரா 40–இந்திய அரசியல் சட்டம்.)

## கைக்குத்தல் அரிசி

3 இனிமேல் ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கக் கூடாது. சமுதாய நல அபிவிருத்திப் பிரதேசங்களில் (பிளாக் டெவலப்மெண்ட்டு) கொடுத்த லைசென்சுகளை ரத்து செய்ய வேண்டும். செங்கல்பட்டு ஜில்லாவில் புரிசை, பிச்சிவாக்கம் கிராமங்கள் உள்பட எல்லா இடங்களிலும் கைக்குத்தல் அரிசித் தொழில் வளர வேண்டும். நெல்குத்தும் கைத் தொழிலை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும்.

## கைத்தறி

4. விசைத் தறிகளைப் புதுத்தக்கூடாது. நிறுத்த வேண்டும். எல்லா இடங்களிலும் கைத்தறிகள் முழு நேரமும் வேலை செய்வதற்கு வேண்டிய நூல் கொடுக்க வேண்டும். கரை வேஷ்டி, புடவைகளைக் கைத்தறிகளே நெய்ய வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்துவது நல்லது. சுய தேவைப் பூர்த்திக்கு இதுஊக்கமளிக்கும். ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விசைத் தறிகளில் உற்பத்தியாகும் துணியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்; உள்நாட்டில் விற்கக் கூடாது. ஏற்றுமதி செய்யாத துணிகளை சர்க்கார் பறிமுதல் செய்து, பஞ்சம், வெள்ளம் முதலியவற்றால் துன்புறும் மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். அப்போதுதான் விசைத் தறிக்கும் கைத்தறிக்கும் போட்டி ஏற்படாது.

## பொது ஜன ஊழியம்

5. கிராம ஊழியர்களுக்கு சர்க்கார்மான்யம் கிடைப்பதற்காகவும் ராஜ்ய சர்க்காரிடமிருந்தும் 'சோஷியல் வெல்பேர் போர்டி'லிருந்தும் உதவி பெறுவதற்காகவும் 26—2—51 தேதியிட்ட ஜி. ஓ 197-ஐ அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். பூதான இயக்கப் பிரசாரத்திற்காக சர்க்கார் பணம் செலவிடுகிறது. சர்க்காரின் அன்றாட அலுவல்களை கவனிக்காவிட்டாலும் பாதகமில்லை. ஸ்ரீ விநோபா கோஷ்டிக்கு வேண்டிய சாப்பாடு வசதிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என சர்க்கார், தன் கலெக்டர், தாசில்தார், ஜில்லா ஊழியர்களுக்குஉத்திரவிட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த சேவையில் ஈடுபட்டுள்ள மற்ற கிராம ஊழியர்களுக்கும் உதவி செய்ய முன் வரவேண்டும். பொதுஜன ஊழியம் செய்ய எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

## சர்க்கார் ஒழுக்க விதி திருத்தம்

6. சர்க்காரிலேயே ஊழல் மலிந்துவிட்டது. சர்க்கார் ஊழியர்களிலே சிலர் பொதுப் பணத்தை ஏப்பம்விடுவது சகஜமாகிவிட்டது. மதுரை ஜில்லா கல்லுப்பட்டியிலே விஞ்ஞான மந்திரம் ஒன்று திறக்கப்பட்டது. ஸ்ரீ காமராஜர் திறந்து வைத்தார். அங்கே நடந்த ஊழல் சர்க்கார் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இருந்தும் சர்க்கார் எவ்வித சமாதானமும் சொல்லவில்லை. நடவடிக்கை எடுக்கவுமில்லை. இதற்கு தக்க பதில் வேண்டும். இந்த மாதிரி பொதுப் பணத்தை ஏப்பம் விடுவதை நிறுத்த வேண்டும். எவன் ஏப்பம் விடுகிறானோ அவனைப் பகிரங்கப்படுத்த வேண்டும். அப்படி பகிரங்கமாக்கக்கூடியவர்கள் சர்க்கார் ஊழியர்தான். ஆனால் சர்க்கார்,ஊழியர்களின் ஒழுக்க விதி அவ்விதம் பகிரங்கப்படுத்தக்கூடாது என்கிறது. இந்த விதியை நீக்கவேண்டும். இதை நீக்கினால் சர்க்கார் ஊழியர்கள் தைரியமாக ஊழல்களை வெளிப்படுத்த முன் வருவார்கள். பொதுப் பணத்தை எவன் ஏப்பம் விடுகிறானோ அவனைக் காட்டிக் கொடுப்பார்கள். உண்மையை நிலைநாட்டவும் நிர்வாகத்திலே நேர்மை உண்டுபண்ணவும் இதுவே வழி.

## காந்தி நிதி பறிமுதல்

7. தமிழ் நாட்டிலே உள்ள காந்தி நிதியை பறிமுதல் செய்ய வேண்டும். ஏனென்றால் அதன் நிர்வாகிகள் சரிவர நடந்து கொள்ளவில்லை. காந்தி நிதியை எதற்காக வசூலித்தார்களோ, அதற்குச் செலவு செய்யவில்லை. அ. இ. காங்கிரஸ் கமிட்டித் தீர்மானமே இந்த நிதியை கண்டித்திருக்கிறது என்றால் அப்புறம் சொல்வானேன். அரசியல் பித்தலாட்டத்துக்கு இந்த நிதி மூலதனமாகக் கூடாது. பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை பஞ்சாயத்து ராஜ்ய பிரச்சாரத்துக்குப் பயன்படுத்த வேண்டும்.

காந்திகர் திட்டத்துக்கும் பயன்படுத்தலாம். பழைய காங்கிரஸ் தியாகிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவி புரியலாம். இந்த விஷயத்திலே காந்தி என்ன சொன்னார்?

"கிராமத்துக்கோ, சில கிராமங்களுக்கோ ஒரு ஊழியருக்கு மேல் கூடாது. இவர்களின் ஆரம்பச் செலவுக்கு வேண்டிய பணம் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில்–அதாவது மூன்று வருஷங்களில் இவர்கள் வரவுக்கும் செலவுக்கும் ஈடுகட்டக் கூடிய நிலையடைய வேண்டும்–என்றார்.

## உப்பு உற்பத்தி செய்ய....

8. செய்யூரிலே உப்பு உற்பத்தி செய்வதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து உடனடியாக 500 ஏகரா நிலம் அதற்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இந்த விஷயமாக சர்க்காரிடம் சென்ற ஐந்து வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். 5000 ஹரிஜனங்கள் வாழ வழி இது. (ஸால்ட் கமிஷனரின்

★ தொடர்ச்சி 8–ம் பக்கம்




சென்னை 1-2-57 வெள்ளி

# ஈழத்து இழிநிலை!

இரு மலைகள் இரு தோள்களாயிருக்க; வரிப் புலியின் வீரம் புயங்களிலே குடியேற; நரிக் குணம் கொண்டோரை நசுக்கி; நெளிகின்ற புழுப்போலப் பகைவரை ஒடுக்கி; திசை எட்டும் புகழ் சேர வாழ்ந்தான், நம் முன்னவன்!

வையகம் கடல் மட்டும் பரவியிருக்கும் நிலப் பரப்பு என்று மற்றவர் வாழ்ந்த காலை, சுற்றிலும் படை சூழ்ந்துவர; நாவாய் ஏறித் திரைகடல் தாண்டி; வெற்றிப் பறை கொட்டியிருக்கிறான், அவன்!

நிலம்; நீர்; தீ; காற்று; முதலிய எந்தத் தடையும் அவன் முன்னேற்றத்தைக் குறுக்கிட்டதில்லை!

ஆனால் ஆண்ட அந்த இனமோ இன்று அஞ்சி நடுங்கி; கை கட்டி; வாய் புதைத்து; மெய்யெலாம் நடுங்குற தூண்டிலில் மீனாய் தவிப்பதைக் காணுகிறோம்!

இலங்கை—ஒரு காலத்தில் தமிழ்ப் படைகளின் மோதலைத் தாங்கமாட்டாது; வெள்ளைக் கொடியை உயர்த்திப் பிடித்து; தாள் பணிந்து கிடந்தது!

இரண்டாயிரம் சிங்களவர் கையில் விலங்குடன் அடிமைகளாய்; அழைத்து வரப்பட்டனர் சோழப் பெரு மன்னனால்!

ஆனால் அடிமை கொண்ட அந்த வீரர் வழி வந்தவனோ, இன்று அடிமையினும் கேவலமாய்; நாயினும் கீழாய் நடத்தப்படுகிறான்!

பாராண்டவன்தான்; ஆனால் அவனைத் திரும்பிப் பார்க்க இன்று ஆளில்லை!

வேல் பிடித்த கரங்கள்தான்; ஆனால் அவனை வறுமைத் தேள் கொட்டிக் கொண்டிருக்கிறது!

அவன் தோள்களிலே வீரமில்லை; வலிமையில்லை!

நிமிர்ந்து நின்ற நெடு மேனியிலே அடிமைச்சுமை ஏற்றப்பட்டுத் தளர்ந்து கிடக்கிறான்! அவனுக்கு ஆறுதல் அளிக்க நாதியில்லை!

அவர்களது தாய்த் திருநாடாம் தமிழகத்திலே இன்று பச்சைத் தமிழர்தான் துரைத்தனம் நடத்தி வருகிறார். ஆனால் அவரது திருவாய் அந்தத் தேய்ந்து போனவர்களது புது வாழ்விற்காக ஒரு நாள்கூட அசைந்தது கிடையாது; அபயம் அளிக்க முன் வந்ததும் இல்லை!

ஈழத்திலே மூன்றிலே ஒரு பகுதியினர் முத்தமிழ்நாட்டார்; உரிமைகள் பறிக்கப்பட்டு மூலையிலே கிடப்பவர்களும் அவர்கள்தான்!

குடியுரிமை இல்லை!

சிங்களவரோடு சம உரிமை இல்லை!

மேலும் அவர்களுக்குக் கல்விச் சலுகைகூட மறுக்கப்படுகிறது!

எட்டு லட்சம் தமிழ் மக்கள் இலங்கைத் தீவிலே குடியுரிமை கோரிப் போரிட்டார்கள். ஆனால் கடந்த ஏழாண்டு காலத்திலே அந்த உரிமை பெற்றவர்களோ ஐம்பதாயிரம் பேர்தான்!

பண்டார நாயகா பண்டிதரின் நண்பர்; அவர் பதவிக்கு வந்து விட்டால் நெருக்கமான தோழமைகாரணமாக அவர் அவரிடம் வாதாடி, தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தருவார் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தார்கள்!

ஆனால் பண்டார நாயகா பதவிக்கு வந்த இந்தக் குறுகிய காலத்திற்குள் என்ன சாதிக்கப்பட்டிருக்கிறது என நினைக்கிறீர்கள்?

அநாதைகளாய் விடப்பட்ட அத்தனை தமிழர்களுக்கும் நியாயம் கிடைத்து விட்டதா?

இல்லை!

இந்தக் குறுகிய காலத்திற்குள் மட்டும் ஐம்பதாயிரம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றனவாம்!

இது புதிதாக குடியுரிமை கோருபவர்களது நிலைமை!

ஆனால் குடியுரிமை பெற்று வாழும் ஆயிரக் கணக்கான தமிழர்களது நிலைதான் என்ன?

அவர்கள் சிங்களவர்கள்போல் எல்லாத் துறைகளிலும் சுதந்தரமாக வாழ முடிகிறதா?

அவர்களது நியாயமான கோரிக்கைகள்—உரிமைகள்—உடமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா?

அதுவும் இல்லை!

அவர்களது அன்னை மொழி அடித்து நசுக்கப்படுகிறது.

மொழிகள் குல முதல்வி தமிழ்; அந்தத் தமிழோ கோபுரத்திலிருந்து குப்பைமேட்டிற்கு விரட்டப்படுகிறது!

மோட்டார் கார்களிலே பதிக்கப்பட்டிருக்கும் 'பிளேட்டு'களில் கூட அதன் 'நம்பர்கள்' சிங்கள மொழியிலேயே எழுதப்பட வேண்டுமென்று இப்போது உத்தரவு வெளியாகியிருக்கிறது!

அம்மட்டோ சிங்களவர் செய்யும் கொடுமை? அழுகின்ற குழந்தையின் கண்ணிலே அனல் பெய்வதைப் போல; முன்னமேயே இரத்தம் வழிகின்ற அவர்களது இதயங்கள் நெருப்புக் குண்டத்திலே தூக்கி எறியப்பட்டிருக்கின்றன!

இலங்கையின் வடக்கு; வடகிழக்கு மாகாணங்களிலே பெரும்பான்மையினராக வாழ்ந்து வருவோர் தமிழர்கள்தான்!

மொழி யார்வத்தால் உந்தப்பட்ட அவர்கள் ஆட்சியாளர்களால் உதாசீனப்படுத்தப்பட்டு வரும் தங்கள் தாய் மொழியினைப் பேணிப் போற்றி வளர்த்திட அந்தப் பகுதியிலே ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த முயன்று வந்தனர்; அதற்கென ஆட்சியாளரையும் அணுகியிருக்கின்றனர்!

ஆனால் மொழி வெறித் தலைக்கேற, பழி தேடி அலையும் பண்டார நாயகாவின் ஆட்சியோ போலிக் காரணங்கள் கூறி அந்தப் பல்கலைக் கழகத்தை அனுமதிக்க மறுத்து விட்டதாம்!

கனல் சொறியும் கதிரவனுக்கும்; கசையடிகளுக்கும் அஞ்சாது காடுகள் மலிந்த ஈழத்தைப் பொன் விளையும் பூமியாக்கியவர் தமிழர்!

மேடுகளைப் பள்ளமாக்கி; வியர்வையை வெள்ளமாக்கி தேயிலையைப் பயிரிட்டவர்கள்; இரப்பர் பாலெடுக்கப் பாலின்றி வாழும் குழந்தைகளைப் பலியாகக் கொடுத்தவர்கள், அவர்கள்!

அவர்கள்தான் இன்று புறக்கணிக்கப்படுகிறார்கள்; நன்றி மறந்த சிங்களவர்களால்!

சத்தெல்லாம் பிடுங்கிக் கொண்டு; சொத்துக்களைப் பெருக்கிக் கொண்டபின் சாரற்ற சக்கைகளாக இன்று ஒதுக்கித் தள்ள முற்பட்டு விட்டார்கள் நிலம் புதுக்கித் தந்த தமிழினத்தை!!

இவர்களுக்காக வாதிட முன்வரவில்லை உலகப் புகழ் தேடிக் கொண்டிருக்கும் பண்டிதர் ஆட்சி! பஞ்சசீலம் தயாரித்தவர் பஞ்சைகளாய் வாழ்ந்திடும் இலங்கைத் தமிழருக்கு சீலமுள்ள வாழ்வு தேடித்தர மறுத்துவிட்டார்!

அவரைத் தட்டிக் கேட்கவும் திறனில்லை; துணிவில்லை—இங்கு பதவியிலிருக்கும் தேசிய வீரர்களுக்கு!

உங்கள் அண்ணன் தம்பி; அக்காள், தங்கை — அனைவரும் வெறுக்கப்படுகிறார்கள்; விரட்டப்படுகிறார்கள், ஈழத்தில்!

அதைப் பார்த்து நிற்கிறது ஒரு பெருங் கூட்டம். கோழைகள் மட்டுமல்ல அவர்கள்; உங்கள் உடன்பிறந்தாரின் நலன்களைக் காட்டிக் கொடுக்கும் மோழைகள்!

அன்புள்ள தோழர்களே! அவர்களுக்கு வாதிட இந்த நாட்டிலே நாதியில்லாமல் போய்விட வேண்டுமா?

பெற்ற தாயாலும்; பிறந்த பொன்னாட்டாலும் புறக்கணிக்கப்பட்ட கடல்கடந்த தமிழர்கள் இன்று உயிருடன் வாழும் அவர்களது சகோதரர்களாலும் ஒதுக்கப்பட வேண்டுமா?

ஆம்; அப்படித்தான் நடக்கும்! ஈழம் வாழும் இளந்தமிழர் குடியுரிமைபற்று குடல் கருகிச் சாகத்தான் நேரும்—நீங்கள் மாட்டுப் பெட்டிக்கு வோட்டளித்தால்—என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்!

# ★ தேர்தலும் ஜனநாயகமும் ★

தேர்தல் வருகிறது; ஜனநாயக அடிப்படையில் பல்வேறு கட்சிகள் போட்டியிடுகின்றன. அகில இந்தியக் கட்சிகளில் மிகப் பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சி முதல், நாட்டுப் பிரிவினைக் கோரிடும் திராவிட முன்னேற்றக் கழகம் வரை, மாறுபட்ட லட்சியங்களும், வேறுபட்ட திட்டங்களும் கொண்டுள்ள பற்பல கட்சிகள் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றன. இந்த நிலையில் வாக்காளனுடைய பொறுப்பு சிக்கலானதுமட்டுமல்ல; சிரமமானதும்கூட!

முதலில் வாக்குரிமை—அதாவது ஓட்டுரிமை—ஜனநாயகத்தில் எவ்வளவு செல்வாக்குடையது என்பதை ஒவ்வொரு வாக்காளனும் உணர வேண்டும். அரசியலில் 'பாமர மனித'னுக்கும் இருக்கும் உரிமையை நிலைநாட்டும் உரிமைச் சீட்டு அது. அரசியல் அமைப்பை ஆக்கவும் அழிக்கவும் அதற்கு ஆற்றல் உண்டு. ஒழுங்காக உபயோகிக்கப்பட்டால் அது உன்னதமான வருங் காலத்திற்கு அஸ்திவாரமாக அமையும்; பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தப்படுமானுல் ஒரு நாட்டையோ, அன்றி சமுதாயத்தையோ சீரழிவுப் பாதைக்கும் இழுத்துச் செல்ல முடியும். இப்படிப்பட்ட ஆற்றல் படைத்த உரிமையை வியாபாரப் பொருளாகக் கருதி, பணத்தைப் பெற்று விலைக்கு விற்பது இழி செயல்—ஈனச் செயல் என்பது மட்டுமல்ல; நாம் வாழும் சமூகத்திற்கும் நமக்கும் நாமே செய்து கொள்ளும் மிகப் பெரிய துரோகம்! இந்தப் பின்னணியில்தான் ஓட்டுரிமை பெற்ற ஒவ்வொருவரும் தேர்தலைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

பணக்காரர்களுக்குப் பண பலமும், ஆட்சியிலிருப்போருக்கு அதிகார பலமும், முன்னவரின் துணை பலமும் நிறைய இருக்கலாம். இந்த இரண்டு சக்திகளும் தவருன வழியில் செல்லும்போது, அவற்றை எதிர்த்து முறியடிக்கப் பாமரனுக்கும் ஏழைக்கும் கிடைத்துள்ள ஒரு அரிய ஜனநாயக ஆயுதம்தான் ஓட்டுரிமை. இந்த அரிய உரிமையை அற்ப காசுக்காக விற்பது, அடிமை முறிச் சீட்டில் கையொப்ப மிட்டுக் கொடுப்பதற்கு ஒப்பாகும்—இதை ஒவ்வொரு வாக்காளரும் உணர வேண்டும். உணரத் தவறுகிறவர்கள் அதனுல் விளையும் தீய விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளியுமாவார்கள்!

ஒவ்வொரு கட்சியும் அவர்கள் லட்சியங்கள் பற்றியும், தாங்கள் பதவிக்கு வந்தால் செய்யவிருக்கும் சாதனைகள் பற்றியும் அவரவர்களுடைய கட்சித் தேர்தல் அறிக்கைகளில் வெளியிட்டுள்ளார்கள். ஜனநாயக அரசியல் அமைப்பில் வாக்காளர்கள் இந்தக் கட்சி அறிக்கைகளில் உள்ள வாக்குறுதிகளை ஊன்றிப் படிக்க வேண்டும்; அல்லது பிறரைப் படிக்கச் சொல்லியாவது கேட்டு உணர வேண்டும். இதற்கு முந்திய தேர்தலில் இந்தக் கட்சிகள் கொடுத்த வாக்குறுதிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தேர்தல் சமயத்தில் மட்டும் வாக்குறுதிகளை மனம் போனபடி அளித்துவிட்டுப் பிறகு, மதோன்மத்தர்களாக சர்வாதிகார வெறியாட்டம் போடுவோரிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்த லட்சியங்களை ஆதரித்தால் மொழி, கலை, கலாச்சாரம், இனவுரிமை ஆகியவை கெடாமல் வாழ முடியும் என்பதை அறுதியிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயக அரசியலில் கட்சிகள் முக்கியமே தவிர, தனி நபரல்ல! இங்கொருவரும் அங்கொருவருமாக உதிரிகளை ஆதரிப்பது ஜனநாயக சிக்கலை அதிகப்படுத்துவதாகும். கட்சிப் பிரதிநிதியாகவே ஒரு தனி நபர் நிற்காவிட்டாலும், அவர் கட்சியின் — நாம் விரும்புகின்ற ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தின் ஆதரவாளராகவேனும் இருக்க வேண்டும். தனி நபரின் செல்வாக்கே எல்லாம் என்ற முடிவு, ஜனநாயகக் கொள்கையின் பயங்கர விரோதியாகும்.

ஆளும் கட்சியும் நாடும் ஒன்றுதான் என்ற மனப்பிரமையிலிருந்து மக்கள் தெளிவு பெற வேண்டும். ஆளும் கட்சி, மெஜாரிடி பலத்தினுல் பதவியிலிருக்கும் நாட்டின் ஒரு அங்கமே தவிர, அந்தக் கட்சியே நாடு அல்ல. ஆளும் கட்சியை எதிர்க்கின்ற கட்சிகள் எல்லாம், தேசப் பற்றும் அரசியல் உணர்வும் அற்றவை என்ற பிரச்சாரம் போலி வாதம் என்பதை மக்கள் அறிய வேண்டும். ஒரு நாட்டின் அரசாட்சி செம்மையுற நடைபெற ஆளும் கட்சி எவ்வளவு முக்கியமோ, அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எதிர்க்கட்சி. குழந்தைப் பருவத்தில் உள்ள ஜனநாயகத்தில் நல்ல எதிர்க் கட்சியை வளரச் செய்வது ஆளும் கட்சியின் அரசியல் கடமை!

அதை அக்கட்சி செய்யத் தவறுகின்ற நேரத்தில்—செய்யவிரும்பாத சமயத்தில் — நல்லதொரு எதிர்க் கட்சியாக உருவாகும் நிலையும் தகுதியும் பெற்றுள்ள கட்சியை ஆதரிக்க வேண்டியது மக்களின் நீங்காக் கடமையாகும். இக்கடமை நிறைவேறு விட்டால், அதிக அளவில் மெஜாரிட்டி பலம் பெற்ற கட்சி ஜனநாயகப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வாய்ப்பில்லாமல் போய், அக்கட்சியை ஆட்டிப் படைக்கும் தலைவன் சர்வாதிகாரியாவதற்கும் வழி ஏற்படுகிறது. இதற்கு வரலாற்றில் எத்தனையோ சான்றுகள் உண்டு.

ஜனநாயகப் பரிசோதனை வெற்றியடைவதற்கு, மக்களிடையே அரசியல் அறிவும் உணர்வும் வளர வேண்டும்—வளர்க்கப்பட வேண்டும். மக்களை அறியாமையில் வைத்தே ஜனநாயக நாடகம் நடத்துவது சர்வாதிகாரிகளின் சாகசம் என்பதை வரலாறு கண்டிருக்கிறது. ஆகவே தேர்தல் காலத்திலாவது அரசியல் கல்வியின் அவசியத்தை மக்கள் எல்லோரும் உணர வேண்டும். அரசியல் நுண்ணறிவு பிரிட்டிஷ் மக்களிடம் நிரம்ப இருப்பதால்தான் அங்கு ஜனநாயகம் வெற்றி பெற முடிகிறது. பெரிய தலைவர்களைக் காட்டி மட்டும் இங்கிலாந்தில் எந்தக் கட்சியும் ஓட்டுக் கேட்பதில்லை; தலைவர்களின் புகழிலும் பெருமையிலும் வைத்துள்ள நம்பிக்கையைவிட, கட்சிகளின் அரசியல் — பொருளியல் திட்டங்களின் தராதரங்களை சீர்தூக்கி முடிவு காண்பதில் பிரிட்டிஷ் மக்கள் நம்பிக்கை உடையவர்கள். அதுவேதான் ஜனநாயக முறையின் அசைக்க முடியாத ஆணிவேராகும்!

ஜனநாயக அரசியலில் கட்சிகளின் நிலையையும் திட்டங்களையும் மக்கள் புரிந்து கொள்ள செய்தித் தாள்களே பெரிதும் துணைபுரியும். ஆனுல் சூழ்நிலை காரணமாக, நம் நாட்டு செய்தித் தாள்களோ, செய்தி விமர்சனத் தாள்களாக, ஆளும் கட்சியிடம் இச்சகம் பேசிப் பிழைக்கும் அவல நிலையில் உள்ளன. ரேடியோவும் அப்படியே. இந்நிலையில் — ஜனநாயக வளர்ச்சிச் சாதனங்கள் யாவும் முடமாகவும் குருடாகவும் இருக்கின்ற நிலையில் — ஓட்டுரிமை பெற்ற மக்கள் விழுப்புணர்ச்சியோடு செயல் புரிய வேண்டும்.

தாம் பெற்ற மக்களுக்குக் கல்வி புகட்டும் கடமை போல, பெற்றோரைப் பேணிப் பாதுகாக்கும் கடமை போல, வாக்குரிமையை முறை தெரிந்து —நலம் அறிந்து — நல்லவர் திறம் உணர்ந்து—நாம்—நம் நாடு, மொழி, பண்பு வாழ—பயன்படுத்த வேண்டும். பண்டு தொட்டே குடஓலை முறை கண்டு ஐவர் வாரியமும், எண்பேராயமும் வைத்து வாழ்ந்த தமிழன் இப்பொழுது ஏமாளியாகிவிடக் கூடாது என்பதே நம் ஆசை.


## மு. கருணாநிதி

### அறிவிப்பு

அன்புடையீர்,

குளித்தலைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் போட்டியிடும் என்னைப் பற்றி என் அனுமதியின்றி வெளியிடப்படும் எந்த அறிக்கைகள், துண்டு வெளியீடுகள், விளம்பரங்கள் எதுவும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

குளித்தலை 30—1—57. | மு. கருணாநிதி.



## மன்றல் அழைப்பு

மண மக்கள் :

**ஆ. பெ. கிருஷ்ணன் — இரா. காந்திமதி**

மணவிழா நிகழுமிடம் :

திரு. எஸ். வி நாட்டார் மில், குளித்தலை.

**விழாத் தலைவர் : மு. கருணாநிதி அவர்கள்**

நாள் : **3—2—1957** ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில்.

வாழ்த்துரை வழங்குவோர் : தோழர்கள், சி. பி, சிற்றரசு. கி. மனோகரன், எம்.ஏ., அ. பெ. தர்மலிங்கம், ஆர். கோவிந்தன் தி. வீ. முத்துகிருஷ்ணன், மீ. சு. இளமுருகு பொற்செல்வி.

து. இராசகோபால், எசனைப்பதி. | ஆ. பெ. குப்புசாமி குளித்தலை.

குறிப்பு : கழகத் தோழர்கள் இதனையே அழைப்பாகக் கருதி மண விழாவிற்கு வருகைதர வேண்டுகிறோம்.

அன்புள்ள பொன்முடி!

பாரத தேசம் கண்டும் கேட்டும் அறியாத ஓர் அதிசயம்!

காங்கிரஸ் மகா சரித்திரத்திலேயே இதுவரை நடைபெறாத ஓர் அற்புதம்!

ராஜ்ய சட்டசபைகளுக்கும், தில்லி லோக சபைக்கும் தங்களைக் காங்கிரஸின் பேரால் ஒரு அபேட்சகராக நிறுத்த மாட்டார்களா?—என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த காலம் மலையேறிப்போய் விட்ட மகா அற்புதம்!

"தயவுசெய்து என்னைக் காங்கிரஸின் பெயரால் தேர்தலில் நிறுத்திவிடாதீர்கள். எனக்குச் சொந்த வேலைகள்பல இருக்கின்றன!" என்று சொல்லிக் காங்கிரஸின் பேரால்தேர்தலில்நிற்க வைத்தவர்கள் தேர்தலில் இருந்து விலகி ஓடும் அதிசயம்!

இந்த அதிசய சம்பவங்கள் வேறு எங்கோ நடைபெற்று வருவதாகத் திகைக்க வேண்டாம்.

எல்லாம் நமது அருமைத் தமிழ் நாட்டிலேதான் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது நமக்குஒருபுறம் அளவு கடந்த துயரம் ஏற்படுகிறது. மற்றொருபுறம் இன்று காங்கிரஸ் உள்ள நிலையில் இப்படி நடைபெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற ஆறுதலும் ஏற்படுகிறது.

நாம் எதற்காக இவ்வளவு வருத்தமும் துயரமும் அடைகிறோம் என்பதை நேயர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம்.

காந்தி மகான் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெயரால், எத்தனை எத்தனையோ தேசபக்தர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து போற்றிய காங்கிரஸின் பெயரால் பொறுக்கப்பட்ட அபேட்சகர்கள் தமிழ்நாட்டில் படும் பாட்டைப் பார்த்துத்தான் வருத்தப்படுகிறோம்.

மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் நிற்பதைப் பெரிய பாக்கியமாகப் போற்றிக் கொண்டாடும் போது தமிழ் நாட்டில் காங்கிரஸின் பெயரால் தேர்தலில் நிற்பதைக் கௌரவக் குறைவாக நினைக்க முன்வந்து விட்டார்கள்!

படித்தாயா; இந்த வாரக் 'கல்கி' ஏடு இப்படித் தலையங்கம் தீட்டிக் காட்டுகிறது!


கள்ள மார்க்கெட்டிலே கத்தை கத்தையாய் கரன்சிகளைச் சுருட்டியவர்களும், சென்னியை மாதர் மடியிலும், சிந்தையை மதுவின் பிடியிலும் ஒப்புவித்து வாழ்ந்த உல்லாசிகளும் கதருடை அணிந்து, காங்கிரசில் உறுப்பினர் ஆகி விட்டால் தங்கள் பாவமெல்லாம் மறைந்து விடும்; தேர்தலில் சுலபமாக வாகை சூடி வாழலாம்—என்ற நிலைமை இருந்தது, ஒரு காலம்!

இன்றோ காங்கிரசின் சார்பாகப் போட்டியிடுவதற்கே பலர் வெட்கப்படுகிறார்கள்! வேதனைக்காளாகிறார்கள்!!

இராமநாதபுரம் ராஜாவைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய், அந்த ராஜா சென்ற தேர்தலில் வென்று; மந்திரியாக மாறியதும் உனக்குத் தெரிந்திருக்கலாம்.

இன்று அவருக்குக் காங்கிரசின் சார்பிலே தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை; அதனால் அவர் ஒரு சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்!

பத்திரிகை நிருபர்கள் காமராசரைப் பேட்டி கண்டதில்



டெல்லியிருக்கும் மத்திய தேர்தல் குழுவினர்தான் ராமநாதபுரம் ராஜாவின் பெயரைப்பட்டியலிலிருந்து நீக்கி விட்டதாக அறிவித்திருக்கிறார்!

முதலில் தீவிர உண்மைக் காங்கிரஸ்காரர்களைத்தான் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுப்போம் என்று அறிவித்தார்கள்!

ஆனால் இப்போதோ ராமநாதபுரத்தாருக்கு மாட்டுச்சின்னம் மறுக்கப் பட்டிருக்கிறது!

இது எதைக் காட்டுகிறது என நினைக்கிறாய், நண்பா?

ராமநாதபுரம் ராஜா குதிரைப் பந்தயம் போன்ற காந்தியாருக்குப் பிடித்தமில்லாத விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்.

அதனால் கதர் கட்டியிருந்த போதும்கூட அவர் தீவிர காங்கிரஸ்காரர் அல்ல என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறார்!

—இதுபோன்ற காரணத்தினால்தான் மத்திய தேர்தல் குழு அவரது பெயரை காங்கிரஸ் பட்டியலிலிருந்து நீக்கியிருக்க வேண்டுமென்று நீகூட யூகிக்கலாம்!

ஆனால் ஒன்று நண்பா! ராமநாதபுரம் ராஜா ஒருவர் மட்டும்தான் குதிரைப் பந்தயத்திலும்; காந்தியார் வெறுத்தொதுக்கிய கேளிக்கை கோலாகலங்களிலும் நடுபட்டு வருகிறார் — என்று நினைத்து விடாதே!

இன்று காங்கிரஸ் நிறுத்தியிருக்கும் ஒவ்வொரு அபேட்சகரையும் சீர்தூக்கிப் பார்த்தால் அவர்களில் எவருமே; எந்தவிதத்திலும் ராமநாதபுரத்தாருக்கு இளைத்தவராக மாட்டார்கள்—இதுபோன்ற விஷயங்களில்!

குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுவது தீவிரக் காங்கிரஸ்காரருக்குரிய குணாதிசயம் அல்லாமலிருக்கலாம்!

ஆனால் குதிரைப் பந்தயத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் அத்தனை பேரையும் காங்கிரஸ் தனது கூடாரத்திலிருந்து விரட்டியிருக்கிறதா? இல்லை; இல்லவே இல்லை!

நீகூட சென்னையிலிருந்தால் தெரிந்து கொண்டிருக்கலாம்— குதிரைப் பந்தயம் நடைபெறும் ஒவ்வொரு 'சீசனிலும்' 'கவர்னர்ஸ் கப் டே' என்றொரு முக்கியமான நாள் வரும்!

அன்றைய தினம் கும்பமேளாத் திருவிழாவா; குடந்தை மகாமகமா—என்று ஐயுறுகிற அளவுக்கு வேடிக்கை பார்ப்போரும்; பணம் வைத்து விளையாடுபவர்களும் கூடியிருப்பார்கள்!

அன்று வெற்றிபெறும் குதிரைக்கும்; அதைப் பழக்கியவருக்கும் மேன்மை தங்கிய கவர்னர்பிரான் வெள்ளிக்கோப்பை வழங்கி கௌரவிப்பார்!

இது எதைக் குறிக்கிறது?

ஆட்சி பீடத்திலிருப்பவர்களே குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை ஊக்குவிக்கிறார்கள் என்பதைத்தானே!

குழந்தையைக் கிள்ளி விட்டு அழுகிற குழந்தை எனக்கு வேண்டாம்; அதனை ஆஸ்ரமத்திற்கு அனுப்பிவிடு—என்று கூறுகிற அப்பனை முட்டாள்; கயவன்; மனிதாபிமானம் அற்றவன்-என்றுதான் கூறுவர்!

ஆனால் குதிரைப் பந்தயத்தை ஒரு தேசியத் திருவிழாவாக மாற்றுகிற வேலைகளில் அரசாங்கத்தையே ஈடுபடச் சொல்லிவிட்டு; அதில் சம்மந்தப்படுகிறார்—என்று காரணம் காட்டி ஒருவருக்குக் காங்கிரஸ் டிக்கெட் கொடுக்க மறுப்பவர்களை என்னவென்று கூறுவது? அருமை நண்பா, நீயே கூறு!

இதில் இன்னொரு பிரச்சினையையும் நீ எழுப்பலாம்.

ராமநாதபுரத்தார் குதிரைப் பந்தய வீரர்—என்பதற்காக மட்டும் அவருக்கு 'டிக்கெட்' மறுப்பதாகக் கூறமுடியுமா? அவர் ஒரு பணக்காரர்—பரம்பரைப் பணக்காரர்!

ஆனால் காங்கிரஸ் இப்போது சென்று கொண்டிருக்கும் பாதையோ சோஷலிசப் பாதை!

அந்தப் பாதையிலே நிற்கும் தடைக் கற்களில் ஒன்றுதான் சேதுபதியார். எனவே ஆவடியிலே நிறைவேறிய ஆவேசத் தீர்மானத்தை யொட்டி பண்டிதர் அவரைத் தூக்கி யெறிந்து விட்டார் — என்று நீ ஏன் கருதக்கூடாது —எனக் கேள்வியொன்றை எழுப்பலாம், நீ!

உண்மைதான் நண்பனே! காங்கிரஸ் சோஷலிசக் கொள்கையுடன் தன்னை முடிபோட்டுக் கொண்டிருப்பதை நான் உணருகிறேன்.

ஒரு பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல சோஷலிசம் ஒரு குல்லாய்-அது எல்லோர் தலைக்கும் சரிப் பட்டுவரும்!

அதை முகில் வண்ணமும், சுருண்ட கேசமும் கொண்டவன் அழகுக்காக அணிந்து கொள்கிறான்!

வேறு சிலர் கொட்டுகின்ற பனியிலிருந்து; வாட்டுகின்ற வெய்யிலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக அணிந்து கொள்கிறார்கள்!

இன்னொரு பிரிவினர் இருக்கின்றனர்—அவர்கள் தலையிலோ சொட்டை; மேலும் முடை நாற்றம் வீசுகிற அளவுக்கு சொறி சிரங்குகள்வேறு!—இவர்களும்கூட அந்தக் குல்லாயை அணிந்து கொள்கின்றனர்!

முதலில் குறிப்பிட்டவர்கள் சோஷலிசம் என்னும் வார்த்தையிலே உள்ள கவர்ச்சிக்காக அதை அடிக்கடி உபயோகிக்கும் ரகத்தவர்கள்! படித்த பணக்கார வாலிபர்கள் சோஷலிசம் பேசும்போது இந்த ரகத்தில்தான் சேருகிறார்கள்!

அடுத்தது; கொட்டுகின்ற முதலாளித்துவப் பனியை; வாட்டுகின்ற பிற்போக்குவெயிலைத் தடுத்து நிறுத்துவதற்காகக் குல்லாய் அணிபவர்கள்! இவர்கள்தான் உண்மைச் சோஷலிஸ்டுகள்!

கடைசியில் குறிப்பிட்டோமே அந்த வகையில் சேர்ந்தது அல்ல காங்கிரஸ்!

அதன் தலையிலே முதலாளித்துவ வழுக்கை விழுந்து, படர்ந்து அடர்ந்து, தியாகத்திலே புடம் போட்டு எடுக்கப் பட்ட ரோமங்களை உதிர்த்து விட்டது.

அந்த வழுக்கை விழுந்த தலையிலே ஒழுக்கக் குறைவு; ஊழல்;

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்



# காதலுக்குக் கண்ணில்லை

தொடர் நாடகம்

காட்சி--27

(நீதி மன்றம் கூடியிருக்கிறது. நீதிபதி அமர்ந்திருக்கிறார். ஜூரர்கள் அமர்ந்திருக்கின்றனர். ராணிக்குரிய ஆசனம் காலியாக இருக்கிறது. வாத்தியங்கள் முழங்கிட ராணி வருகிறாள். எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்துகின்றனர். ராணி அமர்கிறாள்.)

நீதிபதி: மேன்மை தங்கிய ராணியார் அவர்களே! வழக்கைத் தொடங்கலாமா?

(ராணி தலையசைக்கிறாள்.)

குற்றவாளியைக் கொண்டு வாருங்கள்!

(ஆளவந்தான் அவைக்கு இழுத்து வரப்படுகிறான்.)

நீ: உன் பெயர் என்ன?

ஆள: பெயர் எதுவானாலென்ன, நீதிதேவரே?

நீ: நீ நிறுத்தப்பட்டிருப்பது வழக்கு மன்றம் — நினைவில் வைத்துப் பேசு — பெயர் என்ன?

ஆள: ஆளவந்தான் — ஆனால் இப்போது மாளவந்தான் என்றுகூட மாற்றிக் கொள்ளலாம்.

நீ: உன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றத்தின் பயங்கரத்தை உணர்கிறாயல்லவா? அற நாட்டின் காவலராம் புலிவலரைக் கொலை செய்திருக்கிறாய்—இதற்கு உன் பதில் என்ன?

ஆள: பதில் இல்லை.

நீ: அப்படியானால் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?

ஆள: ஒப்புக் கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் — விசாரணை நாடகத்தை விரைவில் முடித்துக்கொண்டு, சட்டம் கூறும் தண்டனையைத் தாருங்கள். நான் பேசப் போவதில்லை.

நீ: உன் மௌனம் உனக்கு மன்னிப்பை வழங்காது. தண்டனையை தளர்த்தாது. கூற வேண்டியதைக் கூறிவிடு. ஆம், உன் பதில் என்ன? கூறு.

ஆள: நான் கூறவேண்டியது ஒன்றுமில்லை.

நீ: அப்படியானால் உனக்குக் கிடைக்கும் தண்டனை, மரணமாகத்தானிருக்கும்.

ஆள: அந்த மகிழ்ச்சிகரமான செய்தியை நிமிடத்திற்கு நிமிடம் எதிர்பார்க்கிறேன்.

(நீதிபதி எழுந்தார். பழிதீர்த்தான் குறுக்கிட்டான்.)

பழி: உயர்திரு நீதிதேவர் அவர்களே! இந்தக் கொலை வழக்கிலே குற்றவாளியாக நிறுத்தப்பட்டுள்ளவன், என்னால் இந்த நாட்டுக் காவலரிடம் அறிமுகப்படுத்தப்பட்டவன். பதவி வாங்கித் தரப்பட்டவன் — ஆகவே, அவனைப் பற்றிய விவரங்களை நான் கூற அனுமதி வேண்டும்.

(ராணி கோபமாக விழிக்கிறாள்.)

நீ: நீர் யார்?

ப: என்னைப் பரம்பரை பணம் படைத்தான் பழிதீர்த்தான் என்பர். பதுங்குமலை அதிபதி—மன்னர் புலிவலருக்கு

★ தில்லை வில்லாளன் எம். ஏ., ★

நெருங்கிய நண்பரிலே நானொருவன்.

நீ: நல்ல நேரத்தில் வந்தீர்—நண்பரைக் கொன்றவனின் வழக்கு முடிவிலே வந்து சேர்ந்துவிட்டீர் — நீர் கூற விரும்புவதைக் கூறலாம்.

ப: கொலை நடந்த நேரத்தில், கொலை நடந்த இடத்திற்கருகில் இருந்தான் இவன் என்பது தவிர, இவன் கொலை செய்தான் என்பதற்கு ஆதாரம் என்ன?

நீ: மும்முறை வேண்டியும்—இவன் வாய்திறக்கவில்லையே! இவன் ஊமை நிலையே, இவனைக் குற்றவாளி என்று கூறுகிறதே!

ப: உயர்திரு நீதிதேவர் அவர்களே! வேறு சாட்சியங்கள் உண்டா?

நீ: வாளால் கொன்றிருக்கிறான்.

ப: கொன்ற வாள் எங்கே இருக்கிறது? அவன் சொந்த வாள் ஒன்று—தந்தை வாள் ஒன்று — இரண்டும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் இரத்தக் கறையுடையனவாக இல்லை.

(ராணியார் அருகில் சென்று பேசுகிறான்.)

ஒருவேளை, அந்த நேரத்தில் ராணியாரின் வாளைப் பிடுங்கிக் குத்தியிருக்கக் கூடுமோ! ராணியார் அப்படிச் சொல்லவில்லையே! நீதி அவையைக் கட்டிக் காப்போரே நீதி தவறக்கூடாது — கொலை செய்யப்பட்ட வாள் எங்கே? அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

(ஆளவந்தானின் அருகில் செல்கிறான். மெதுவாகப் பேசுகிறான்.)

ஆளவந்தா! நீ கொலையாளி அல்ல—நானறிவேன். கணவனாலே தந்தை கொலை செய்யப்பட்டான்—மனைவியாலே மகன் கொல்லப்பட்டான் என்று கதை எழுதப்படவேண்டுமா? உண்மையைக் கூறு.

ஆள: அண்ணா! மீண்டும் என் வாழ்வில் குறுக்கிட்டு குழப்பம் விளைவிக்க வேண்டாம். நானே கொலை செய்தேன் - தந்தையின் மனங் குளிர்ந்துவிட்டது. அந்த திருப்தியோடு போங்கள்.

(பழி தீர்த்தான் மிக உரக்கப் பேசுகிறான்.)

ப: நான் என் மனதில் உண்மையென்று பட்டதைக் கூறப் போகிறேன்.


## புது வாழ்வு வெளியீடுகள்

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எழுதியவை

| | |
|---|---|
| "உரிமை வாழ்வு" (அரசியல் விளக்கக் கட்டுரைகள்) | 1—8—0 |
| அழகரசி (வரலாற்று ஓவியம்) | 1—4—0 |
| அறிவும் சிந்தனையும் | 0—8—0 |
| வளரும் கிளர்ச்சி | 0—8—0 |
| தொண்டா? துவேஷமா? | 0—8—0 |

தோழர் நே. ஜி. இராதாமணாளன் இயற்றியவை

| | |
|---|---|
| 'வீணை' (கற்பனைச் சித்திரம்) | 2—8—0 |
| 'பூக்குடலை' (சிறு கதைகள்) | 2—0—0 |

கிடைக்குமிடம்:

பாரி நிலையம், 59-பிராட்வே, சென்னை—1.


ஆள: நீங்கள் கூறக்கூடாது.

ப: இல்லை. நான் பட்டுத்திரையைக் கிழிக்கிறேன். ராணி பதில் கூறட்டும்.

ஆள: வேண்டாம். வேண்டாம்—நானே முழுக் கதையைக் கூறுகிறேன்.

ப: ஆம், அப்படிப் பேசு. பழியோரிடம், தண்டனையோரிடம் போகக் கூடாது.

நீதி: குற்றவாளி உண்மையைக் கூற ஒப்புக் கொள்வதானால், நான் பேச அனுமதிக்கிறேன்.

ஆள: நீதி தேவரே, கொலை நடந்தது என்பது முழுக்க முழுக்க உண்மை.

நீ: அதற்கு உன் பதில்தான் தேவை.

ஆள: மனிதரை மனிதர் இரத்தம் வடியச் செய்வது மன்னிக்க முடியாத குற்றம் என்பதை உணர்கிறேன்.

நீ: அப்படி உணர்ந்த நீ இப்படி ஏன் நடந்தாய்? எடுத்துக் கூறு.

ஆள: அவையோர் கொஞ்சம் அமைதியாக இருந்து, என் கதையைக் கேட்க வேண்டும். இந்தக் கொலையில் அடங்கியுள்ள இரகசியத்தை எடுத்துக்கூற அனுமதிக்க வேண்டும். நள்ளிரவில் கள்ளத்தனமாக மன்னனை வாளால் குத்திக் கொன்ற கொலையாளி யார் என்பதை எடுத்துக்கூற எனக்கு அனுமதி தாருங்கள்.

நீ: கூறலாம்.

(ராணி கோபக் கடலானாள்.)

பொ: குற்றவாளி எதுவும் பேச நான் அனுமதிக்கத் தயாரில்லை; இவன் கொலை புரிந்தான் என்பதற்கு, கொலை நடந்த இடத்தில் இவன் வாளோடு இருந்தான் என்பதொன்றே சாட்சியமாகாதா?

(சட்டப் புத்தகத்தை நீட்டுகிறார்.)

நீ: சட்ட ஏட்டைப் புரட்டிப் படிக்கட்டுமா?

பொ: (ஏட்டை வீசியெறிந்துவிட்டு) சட்ட ஏடு கிடக்கட்டும். இந்தக் கொலைகாரன் இந்த அவையில் மன்னர்மீது பழி கூறலாம். அறவாழிக்கே இழுக்குவரும் மொழிகள் வீசலாம்—ஏன், என் மீதுகூட அபாண்டம் கூறலாம்...

நீ: குற்றவாளியைப் பேச சட்டம் அனுமதிக்கிறதே—மேன்மைக்குரிய ராணியே!

பொ: இவன் பேசக்கூடாது—தூக்குக் கயிற்றில் தொங்க வேண்டாம்.

நீ: சட்டத்தைக் கவனியுங்கள்—ராணியாரே!

பொ: சட்டங்கள், மன்னர் குலத்தினைக் கட்டுப்படுத்த அல்ல—மற்ற மனித குலத்

# நம்மைப் பற்றி....!

மற்ற கட்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை குழவிப் பருவத்திலுள்ள ஒரு கட்சி என்றுதான் சொல்ல வேண்டும். எனினும் 62 ஆண்டுகளாய் இயங்கிவரும் காங்கிரஸ் கட்சி 205 ஆட்கள் கிடைக்காமலும், அதிலும் 30 பெண் அபேட்சகர்களும், 30 மைனாரிட்டி வகுப்பு அபேட்சகர்களும் கிடைக்காமல், யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற ஆராய்ச்சியிலிறங்கியிருக்கையில், எட்டு ஒன்பது ஆண்டுகளாகவே இயங்கி வரும் தி. மு. க. 150 அபேட்சகர்களை நிறுத்துவதென்று செய்துள்ள முடிவை ஜனநாயக ஆட்சி முறையில் நம்பிக்கை கொண்டவர்கள் வரவேற்காமலிருக்க முடியாது.

150 இடங்களுக்கு என்ன, 250 இடங்களுக்குவேண்டுமானாலும் அபேட்சகர்களை நிறுத்திவிடலாம். ஆனால் அவர்களுக்கு தகுதி வேண்டாமா? ஜெயிக்க வேண்டாமா? -என்ற கேள்வி எழக்கூடும். அது இயற்கையுங்கூட. ஆனால் இந்தக் கேள்விக்கு தி மு க. தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சேலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் அழகாக பதில் கொடுத்துள்ளார்:

"சில இடங்களிலே நாம் போட்டியிட இருப்பது அந்தத் தொகுதியிலேயிருக்கிற காங்கிரஸ் சக்தியை அந்தத் தொகுதியிலேயே தேக்கி வைப்பதாகும். சில தொகுதிகளிலே நாம் போட்டியிடுவது அந்தத்தொகுதிகளில் இருக்கும் காங்கிரஸார் வேறு தொகுதிக்கு வந்து அங்கு இருப்பவர்களைத் தட்டி விடாமலும், உசுப்பி விடாமலும் இருக்கச் செய்வதற்கு. இன்னும் சில தொகுதிகளில் நாம் போட்டியிடுவது அந்தத் தொகுதிகளில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர் தங்கள் வாக்குறுதிகளை வேறு பெட்டிகளில் போடக்கூடாது என்று ஒதுங்கி நிற்கும்படி நேரிடாமல், உனக்கு என்று ஒரு பெட்டி உண்டு உன் வாக்குகளை அதிலே போடு-என்று திருப்புவதற்காகும். சில தொகுதிகளில் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்ற கருத்தோடும் நிற்கிறோம்." என்று அண்ணா விளக்கம் கொடுத்துள்ளார், விளைக்கள் கிளப்பப்படுமென்பதை எதிர்பார்த்து!

—'தமிழ் முரசு' சிங்கப்பூர் (13-1-57)

---

தைக் கட்டிப் பிடித்து அடக்க!

ப: நீதிதேவரே—ராணியாரே! ஆயினும் சட்டத்தின்முன் தலை வணங்கியே ஆகவேண்டும் — ஆளவந்தான் பேச அனுமதி வேண்டும்.

நீ: பழிதீர்த்தாரே! உன் பேச்சை நான் அனுமதிக்கவில்லை. ராணியாரே, சட்டத்தை மதிக்கவேண்டிய நாமே, சட்டத்தை மதிப்பிழக்கச் செய்தால், அதன் தீமையான விளைவுகளை நாமே அனுபவிக்க நேரிடும்.

பொ: தீங்கு வராது—வந்தால் தாங்கிட தைரியம் உண்டு—அவையோரே! என் மன்னனின் உயிர் குடித்த ஒருவனுக்காக சட்டம் பேசுகிறீர்கள்—அவன் சார்பில் நீதி இருக்கிறது என்று வாதிடுகிறீர்கள்! நீதிதேவரே, யோசித்துப் பேசுங்கள்.

நீ: ராணியாரே, தாங்கள் அறவாழி காத்துவரும் அறத்தைப் பழிக்கிறீர்கள்—அனுமதிக்க முடியாது. ஆளவந்தான் பேசலாம்.

பொ: நீதிக்கு வணங்க நான் தயாராக உள்ளேன். ஆனால் நிலைமையை விளக்கிக் கொள்ள வேண்டுகிறேன். இவன் சாதாரண கொலையாளி யல்ல—ஒரு புரட்சிக்காரன்—சட்டத்தை எட்டி உதைத்தவன் — ராஜத்துரோகி — நாட்டை எதிர்த்தே வாளெடுத்துப் போரிட்டவன் — நயவஞ்சகன்-கூடிக் குடிகெடுத்தவன் —வஞ்சகன்—துன்மார்க்கன் —மன்னனைக் கொன்றான் என்றால், மன்னன் ஆண்ட இந்த மாநிலத்தையே வெட்டி வீழ்த்தினான் என்றே கருத வேண்டும். இவன் நாட்டின் பொது எதிரி—படை திரட்டி, இந்நாட்டை எதிர்த்திருந்தால்கூட பரவாயில்லை. உள்ளேயே இருந்து, மன்னனைக் கொன்ற இந்த மாபெரும் பாவியையா பேசச் சொல்கிறீர்கள்? நீதிதேவரே! என் மன்னரை, மீண்டும் பேசச் செய்யும் சக்தி உங்கள் நீதிக்கு இருக்குமானால், இவனையும் பேசச் செய்யுங்கள்!

(ஆளவந்தான் அவள் பேச்சைக் கேட்டு காதுகளைப் பொத்திக் கொள்கிறான்.)

ஆள: என் காதுகளை என்னால் நம்பமுடியவில்லை!

பொ: கோட்டைக் கொடியை தாழ்த்துங்கள்—நகரில் அனைவரும் கருப்புடை அணிந்து இறந்த காவலருக்குத் துக்கம் தெரிவியுங்கள் — அது மட்டுமல்ல; இவனை, இருட்டறைச் சிறைக்கு விரட்டி, அதில் செத்து மடிவதின் மூலம், மாண்ட மன்னருக்குப் பரிந்து மனைவி பழி வாங்கினாள்—என்ற மனத்திருப்திக்கு வழி வகுங்கள்.

ஆள: என் கரங்களின் விலங்குகளை நீக்குங்கள்; உங்கள் சட்டம் கடலலையைக் கட்டுப்படுத்தினாலும், கடும் புயலைத் தடுத்து நிறுத்தினாலும், என் நாவை அடக்க முடியாது நீங்கள் என் தொண்டையை வாள் கொண்டு வெட்டினாலும், அதிலிருந்து வடியும் இரத்தத் துளி ஒவ்வொன்றும் நா பெற்றுப் பேசும்.

நீ: உமது ஆத்திரப் பேச்சு அர்த்தமற்றது. சட்டத்திற்கு எவரும் தலை வணங்கியே ஆகவேண்டும். (ராணியைப் பார்த்து) சட்ட ஏட்டில் தங்கள் முடிவிற்கு இடமிருக்கிறதா என்று பார்க்கிறோம்.

(நீதிபதியும், துணை நீதிபதிகளும், ஜனங்களும் உள்ளே செல்கின்றனர்.)

ராணி: சட்டத்தைப் புரட்டுங்கள்—ஆனால் இந்தச் சண்டாளனுக்கு சலுகை காட்டி விடாதீர்கள்.

ப: சட்டத்தை அலசுங்கள், ஆனால் மனச் சாட்சியையும் சேர்த்துக் கொண்டு!

ரா: (பழி தீர்த்தானைப் பார்த்து) குறுக்கிடாதீர் மீண்டும். உமது வாழ்விலும் கோணல் வந்துசேரும். (ஆளவந்தானைப் பார்த்து) இப்போது என் முறை போதும்!

ஆள: பேசாமல் சாக மாட்டேன் நான்.

ரா: பேசிடாமல் சாவதுதான் நல்லது.

ஆள: அறவாழி ராணியார் இப்படி மாறிடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

ரா: இப்படி மாற்றப்படுவேன் என்று எதிர்பார்க்கவில்லை!

(இப்போது நீதிதேவர் வெளியில் வருகிறார்.)

நீ: சட்ட ஏட்டைத் துருவித் துருவிப் பார்த்தோம். ராணி மாதேவியாரின் கருத்துக்கு இடமுண்டா என்று பார்த்தோம்.

ரா: முடிவைக் கூறுங்கள், முன்னுரையை நீட்டாமல்.

நீ: ராணி மாதேவி கூறியபடி மன்னனைக் கொன்றவன் மாபாதகன்—மக்கள் விரோதி —சட்ட விரோதி — தூக்கு மரத்திலே தொங்க வேண்டியவன்—அவன் நீதி அவையிலே குனிந்த தலையனாய், ஊமையனாய் நின்று தண்டனை ஏற்க வேண்டியவன்.

ரா: நன்றி, நன்றி, நீதிதேவரே! தங்கள் சட்டங்களுக்கு நான் தலை வணங்குகிறேன். உடனே இவனைக் கொலைக்களத்திற்கு அனுப்பி வையுங்கள்.

நீ: ஆனால், இந்தக் குற்றவாளி மன்னரின் மெய்ப்பாதுகாப்பாளன்-மிக நெருங்கியவன்.

ரா: இருக்கட்டுமே, கொலைகாரனாயிற்றே!

நீ: ஆனால் நம் நாட்டு சட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது, இந்த நாட்டிலே பிறந்தவனாக இருந்தால்தான் அவையிலே பேசக்கூடாது. ஆனால் இவனோ அழகாபுரியைச் சேர்ந்தவன். ஆகவே பிற நாட்டான். ஆகவே. இவன் பேச உரிமை தருகிறோம், அண்டை நாட்டுக்கு நாம் காட்டும் மரியாதையின் அடையாளமாக. அதுவும், அழகாபுரி தங்களின் தாயகம்!

ஆள: தங்கள் சட்டத்திற்கு தலை வணங்குகிறேன்.

ரா: (கோபமாக) சட்டப் புத்தகத்தில் இப்படி எழுதியிருக்கிறதா? அப்படியானால் அந்தப் புத்தகத்தைக் காட்டுங்கள். அந்த வரியுள்ள பக்கங்களை சுக்கு நூறாகக் கிழித் தெறிகிறேன். ஐயோ, இந்நாட்டை ஆண்டவனை அவமதிக்கும் சட்டம்—இந்நாட்டை விட்டுப் போய்விடுகிறேன். உடனே, இரண்டு குதிரைகள் தயாராகட்டும். அழகாபுரிக்குச் செல்கிறேன்!

[அரசியாரின் கட்டளையை நிறைவேற்ற மெய்ப் பாதுகாவலரில் ஒருவன் மண்டியிட்டு வெளியேறுகிறான்.]

நீதிதேவனே! தங்கள் சட்டம் அப்படியே கூறட்டும்! நான் இந்நாட்டு ராணி—இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைக்கிறேன்.

நீ: கொலை வழக்கை நிறுத்தி வைக்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை.

ரா: அப்படியானால், இந்தக் கொடுமைக்காரனின் பேச்சைக் கேட்க நான் சித்தமாயில்லை—போகிறேன்.

நீ: போகமுடியாது ராணி மாதேவியாரே!

ரா: போக முடியாதா? எந்த சட்டத்தின் மூலம் என்னைத் தடுத்து நிறுத்துகிறீர்கள்—நான் இந்த நாட்டின் ராணி!

நீ: தேவியாரே! அதே காரணத்தால் போகக்கூடாது என்கிறேன். தாங்கள் ராணி மாதேவியாக இருப்பதால் தான் — தாங்கள்தான் இந்நாட்டின் குடி மக்களின் உயிரும் உடலும்—தாங்கள் தான் நீதியாற்றின் ஊற்றுகள்—தங்கள் மறைவால், நீதி ஆறு வற்றிவிடும். ஆகவே, இந்தக்குற்றவாளிக்குத் தீர்ப்பளிக்காமல் போகக்கூடாது.

ரா: என் மனதிற்கு விரோதமாக என்னை இங்கே இருக்கச் சொல்லாதீர்கள்.

(தொடரும்)

**MURASOLI** 0-2-0

# கடைசிப் பக்கம்

## எழுத்தாணி

வி. ஏழுமலை; நாகை.

(?) தி. மு. க. வைத் தாக்குவதற்காக சில 'வயிற்றெரிச்சல் காரர்கள்' கைக் கொள்ளும் மட்ட ரகமான வழிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**செய்யக் கூடாது என்று நினைப்பவைகள் செய்ய முடியாதவைகள் அல்ல-**
*என்பதைத்தான் அவர்களுக்கு எச்சரிக்கையாக அனுப்ப விரும்புகிறோம், நண்பரே!*

கே. ஆர். குணஜோதி;
நாகர்கோயில்.

(?) கம்யூனிஸ்ட்டுகளையும், காமராசரையும் ஒப்பிட முடியுமா?

**முடியும்; காமராசரும் சரி; கம்யூனிஸ்ட்டுகளும் சரி — ஒரே தொகுதியில் ஒரு தடவைக்கு மேல் மீண்டும் அவர்கள் போட்டியிடவில்லை!**

வீராசாமி; மாயூரம்.

(?) காமராசருக்குப் பதில் சுப்ரமணியம் முதல் மந்திரியாக வந்தால் எப்படி இருக்கும்?

**எந்தக் காங்கிரஸ்காரர் அந்தப் பதவிக்கு வந்தாலும் நிலைமை அப்படியேதான் இருக்கும்!**

வி. ராமநாதன்; பெரம்பலூர்.

(?) ராமநாதபுரம் ராஜா சுயேச்சையாகப் போட்டியிடும்போது 'டிக்கெட்' கொடுக்கப்படாத பரமேஸ்வரன் மட்டும் ஏன் இன்னும் சுயேச்சையாகவில்லை?

**அவர் 'சுய இச்சை'யாக முன்பு செய்த திருவிளையாடல்கள் காரணமாகத்தான் அவர் இன்னும் சுயேச்சையாகவில்லை, தோழரே!**

எத்திராஜ்; புதுவை.

(?) அமிர்த கௌரி ஏன் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை?

**வயதாகிவிட்டது, தோழரே! தேர்தலில் 'நிற்க முடியாத' அளவிற்கு அவருக்கு வயதாகி விட்டது!**

---

## நீட்டோலை...

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

*பித்தலாட்டம்-போன்ற சிரங்குகள் முளைத்து சீழ் கக்கிக் கொண்டிருக்கிறது!*

*அதனால்தான் தோழா, அந்த வழுக்கைத் தலையையும்; கிழட்டுத் தோற்றத்தையும்; குருத்து விட்டுக் கிளம்புகிற சொறி சிரங்குகளையும் மறைப்பதற்காகப் பண்டிதர் கட்சி இப்போது சோஷலிசக் குல்லாய் அணிந்து கொண்டிருக்கிறது!*

*ராமநாதபுரம் ராஜா ஒரு பணக்காரக் குடியில் வந்தவர்; முதலாளித்துவக் குட்டையில் ஊறிய மட்டை என்பதற்காக அவருக்குக் காங்கிரஸ் டிக்கெட் மறுக்கப்பட்டிருந்தால், நீ நன்முக யோசித்துப் பார்க்க வேண்டும்-அதற்கடுத்த மாவட்டத்திலே ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு காங்கிரசின் பெயரால் தேர்தலில் கலந்து கொள்வதற்கு ஏன் வாய்ப்பளித்திருக்கிறார்கள், இந்த வகைகெட்ட சோஷலிச வீரர்கள்?*

*முத்தையா செட்டியார் என்ன சாமான்யரா? சிறைச்சாலை சென்று வந்தாரா? தியாக முத்திரை குத்திக் கொண்டவரா?*

*—இல்லை, நண்பா; இல்லை! பணம் இருக்கிறது என்பதைத் தவிர அவரிடம் வேறு எதுவுமே இல்லை, காங்கிரசிலே 'டிக்கெட்'வாங்கித் தருவதற்கு!*

*ஒன்றை மட்டும் நீ நினைவில் வைத்துக்கொள் — ராமசாமிப் படையாச்சியைவிட தரத்தில்-'குணத்'தில் — 'நடவடிக்கைகளில்' வேறெந்தத் துறைகளிலும் ராமநாதபுரம் ராஜா குறைந்தவரல்ல! ராமநாதபுரத்தார் ரகசியமாகச் செய்து வருவனவற்றைக்கூட ராமசாமியார் துணிந்து செய்வது உலகமறிந்ததே!*

*இருந்தும் ராமசாமிப் படையாச்சியாரை காங்கிரஸ் ஒட்டிக் கொண்டிருப்பதேன்?*

*காரணம் ஒன்றே ஒன்றுதான்! ராமசாமிப் படையாச்சிக்குப் பின்னால் பத்து எம். எல். ஏ. க்கள் — என்கிற நிலைமை உருவாகி யிருக்கிறது!*

*ராமநாதபுரத்தாரோ தனி ஆள்!*

*—எனவேதான் அவர் தூக்கி எறியப்பட்டு விட்டார்; ராமசாமிப் படையாச்சி இருக்கிறார்! ஆனால் அடுத்த தேர்தலுக்கு அவர் இருப்பார் என்று எவரும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஏனெனில் வன்னியப் பெருமக்களது மண்டலத்திலேயே மாபெரும் பிளவொன்றைக் கிளப்பிவிட்டு, வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு என்கிற விதத்திலே வேறொரு ராமசாமிப் படையாச்சியைக் கொண்டு வந்து, இந்த ராமசாமியாரை அயோத்தியா பட்டணத்திற்கே அனுப்பி வைத்து விடுவார்கள் காங்கிரஸ் குள்ளநரிகள்; அந்தக் காலமும் விரைவில் வரத்தான் போகிறது; நாம் நம் இரு கண்களாலும் அதைப் பார்க்கத்தான் போகிறோம்!*

*தோழனே; 'கல்கி' ஏடு எழுதுகிறது—*

*"மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் நிற்பதைப் பெரிய பாக்கியமாகப் போற்றிக் கொண்டாடும்போது, தமிழ் நாட்டில் காங்கிரசின் பெயரால் தேர்தலில் நிற்பதைக் கௌரவக் குறைவாக நினைக்க முன் வந்துவிட்டார்கள்"-என்று!*

*தமிழ் நாட்டில் மட்டும்தான் காங்கிரசிற்கு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது — என்று நினைத்து விடாதே! சில வாரங்களுக்கு முன் பீகாரிலேகூட ஆயிரம் காங்கிரஸ் ஊழியர்கள் காங்கிரசை எதிர்க்க மாநாடு கூட்டியிருக்கிறார்கள்!*

*'கல்கி' ஆச்சாரியாரது அந்தராத்மா அல்லவா; அதனால் தான் அது அதை மறைத்து விட்டது!*

*நண்பா, இந்த வார 'முரசொலி' இதழின் முகப்புப் படத்தைப் பார்த்தாயா? பண்டித நேரு என்னும் 'பரம்பொருளின்' அருளால் வடக்கு ஆலை அரசாக, மண்வளம்மிக்க பூமியாகமாறி வருவதையும்—தென்னகம் வறண்ட பாலையாகத் தேய்ந்து வருவதையும் நமது ஓவியர் விளக்கியிருக்கிறார்!*

*காங்கிரஸ் அமைச்சர்கள் தாங்கள் செல்லுமிடங்களில் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டங்களையே தங்களது சாதனைகளாக முழக்கி வருகிறார்கள்.*

*காங்கிரசிற்கு வோட்டளிக்கா விட்டால் திட்டத்தில் தென்னகத்திற்கு இப்போது கிடைத்திருக்கிற இந்தப் பங்கும் இனி கிடைக்காது என்னும் விதத்திலே பிரச்சார பீரங்கியை முடுக்கி விட்டிருக்கிறார்கள்!*

*இவர்கள் எதைத் தங்களது மாபெரும் சாதனை என்று பேசி வருகிறார்களோ அதையே மறுத்திருக்கிறார் பம்பாயிலே ஒரு 'பெரிய மனிதர்'! வணிக வேந்தர்!*

*ஷராப் என்பது அவரது பெயர். அவர் பெரிய மனிதர்; பண வசதியிலும் கூட! பல கமிட்டிகளுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார், அவர். அவர் தான் குறிப்பிட்டார்:*

**முதல் ஐந்தாண்டு திட்டத்திலே காங்கிரஸ் சாதித்து முடித்ததாகச் சொல்லப்படும் பல திட்டங்கள் ஆங்கிலேயர் காலத்திலேயே திட்டமிடப் பட்டனவாகும்!**

*—பார்த்தாயா, தோழா; வெள்ளையன் பெயரை அடியோடு மறைப்பதுமட்டுமல்லாமல்; ஏதோ தாங்கள் தயவு வைக்காவிடில் அந்தத் திட்டங்களுக்கு அஸ்திவாரமே போடப்பட்டிருக்காது-என்று முழக்குகிறார்கள்—பொது மக்களை முட்டாள்களாக்கும் இந்தப் போலி வேஷதாரிகள்!*

## காமராசரே ...

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

*கடிதம் ஸி. நெ. 3 (18) பி|51 தேதி 25—8—56.)*

*உங்களால் முடிந்தவற்றை நீங்கள் செய்துவிட்டு பாக்கியை யூனியன் சர்க்காருக்கு வற்புறுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.*

*13-ம் தேதிக்குள் உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன், இல்லையானால் கடுமையான நடவடிக்கையில் இறங்குவேன், என்னைப் போன்ற தனி நபர் என்ன செய்ய முடியும்? சாகும் வரை உண்ணுவிரதம்—ஆண்டவனிடம் சரண் புகல்—இதைத் தவிர வேறு வழியில்லை. இது வரை என் உணர்ச்சியை அடக்கி வந்தேன். நெஞ்சு பொறுக்கவில்லை. மக்கள் படும் கஷ்டம் என்றால் சகிக்கமுடியவில்லை.*

தங்கள் அன்புள்ள,
**சங்கு கணேசன்.**

---

*இதற்கு 'கல்கி' ஏடுகூட சரியான பதில் தந்திருப்பதை என்றால் இங்கே சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை.*

*"காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களோ மக்கள் மத்தியில் ஒரு பயத்தை உண்டாக்கித் தங்களுக்கே வோட்டுப்போடச் சொல்லுகிறார்கள்.*

*"இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால்தான் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். காங்கிரசைத் தவிர வேறு யாராவது ஆட்சிக்கு வந்து விட்டால் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது" என்று மக்கள் மனதிலே காங்கிரஸ்காரர்கள் ஒரு பீதியை உண்டு பண்ணுகிறார்கள்.*

*நாட்டு நலனில் அக்கறையுள்ள எந்த மக்கள் ஆட்சிக்கு வந்தாலும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்கள் இன்னும் சிறந்த முறையில், இன்னும் துரித காலத்தில் நடைபெற்றே தீரும்"*

*—'கல்கி' காங்கிரசைத்தாக்கி எழுதுவானேன் என்று கேள்வி கேட்பதிலே நேரத்தை வீணாக்காதே, நண்பனே! இந்த வாசகங்களிலும் உண்மை யிருக்கிறது என்பதை மட்டும் எடுத்துக் கொள்! அதை அடுத்தவருக்கு இயம்பு!*

*மற்றவை பிறகு.*
*இங்ஙனம்,*
*உன் அன்புத் தோழன்*

---

## "வெள்ளிவீதி"

### அறிவிப்பு

*புதிய அமைப்புடன் இதழ் வெளியிட இருப்பதால், சில தவிர்க்க முடியாத காரணங்களால் 1-2-57 இதழ் வெளிவரவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 10—2—57 இதழ் அழகிய அமைப்புடன், குறித்த காலத்திற்கு முன்பே, இரண்டே அணு விலையில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*—நிர்வாகி.*

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம் 4—128 மவுண்ரோடு சென்னை-6. தமிழ்நாடு